©
தமிழ்நாடு அரசு
2008

கையெழுத்துத் தொடர்

நிதித் (படிகள்) துறை

## அரசாணை எண்.107, நாளது மார்ச் 22, 2008
## (சர்வஜித், பங்குனி 9, திருள்ளுவர் ஆண்டு 2039)

படிகள் – அகவிலைப்படி – 1.1.2008 முதற்கொண்டு உயர்த்தப்பட்ட அகவிலைப்படிவீதம் – ஆணைகள் – வெளியிடப்படுகின்றன.

பின்வருவனவற்றைப் படிக்கவும்:-

1. அரசாணை நிலை எண்.437, நிதி (படிகள்) துறை, நாள் 13.09.2007.
2. மத்திய அரசு, புதுடில்லி, நிதியமைச்சகம், செலவுத்துறையின் 17.03.2008 ஆம் நாளிட்ட எப்.எண்.1(1)/2008-E-II(B) ஆம் எண்ணுள்ள அலுவலகக் குறிப்பு.

*****

**ஆணை:**

மேலே பார்வை 1–ல் படிக்கப்பட்டுள்ள அரசு ஆணையில் கீழே விவரித்துள்ளபடி, மாநில அரசுப் பணியாளர்களுக்குத் திருத்தப்பட்ட அகவிலைப்படி வீதத்தை அனுமதித்து ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன:-

| எந்நாளிலிருந்து வழங்கத்தக்கது என்பது | அகவிலைப்படி வீதம் (மாதம் ஒன்றுக்கு) |
|---|---|
| 1.7.2007 | அடிப்படைச் சம்பளம் மற்றும் அகவிலை ஊதியத்தில் 41 சதவீதம் |

2. மேலே பார்வை 2–ல், படிக்கப்பட்டுள்ள மத்திய அரசு அலுவலக குறிப்பில் அதன் பணியாளர்களுக்கு 1.1.2008 முதற்கொண்டு பின்வருமாறு திருத்தப்பட்ட வீதத்தில் அகவிலைப்படி அனுமதித்துள்ளது.

| எந்நாளிலிருந்து வழங்கத்தக்கது என்பது | அகவிலைப்படி வீதம் (மாதம் ஒன்றுக்கு) |
|---|---|
| 1.1.2008 | அடிப்படைச் சம்பளம் மற்றும் அகவிலை ஊதியத்தில் 47 சதவீதம் |

3. மேலே படிக்கப்பட்டுள்ள மத்திய அரசின் ஆணையை பின்பற்றி, தற்போது மாநில அரசுப் பணியாளர்களுக்கு கீழே குறிப்பிட்டுள்ளபடி, திருத்தப்பட்ட வீதத்தில் அகவிலைப்படி அனுமதிக்கிறது.

| எந்நாளிலிருந்து வழங்கத்தக்கது என்பது | திருத்தியமைக்கப்பட்ட அகவிலைப்படி வீதம் (மாதம் ஒன்றுக்கு) |
|---|---|
| 1.1.2008 | அடிப்படைச் சம்பளம் மற்றும் அகவிலை ஊதியத்தில் 47 சதவீதம் |

4. உயர்த்தப்பட்ட வீதத்திலான அகவிலைப்படியை 1.1.2008 முதற்கொண்டு ரொக்கமாக வழங்கப்படும்.

5. பல்வேறு நிலைகளில் அடிப்படைச் சம்பளம் பெறும் பணியாளர்களுக்கு அனுமதிக்கத்தக்க திருத்தப்பட்ட அகவிலைப்படி குறித்த விவரங்கள், இந்த ஆணையின் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளன. பணியாளரின் அடிப்படைச் சம்பளம், இந்த ஆணையின் இணைப்பின் பத்தி (1)–ல் குறிப்பிடப்பட்டுள்ள இரண்டு அடிப்படைச் சம்பள நிலைகளுக்கிடையே வருமாயின், அத்தகைய இனங்களில் திருத்தப்பட்ட அகவிலைப்படி சதவீத வீதங்களில் கணக்கிடப்பட வேண்டும். திருத்தப்பட்ட அகவிலைப்படியைக் கணக்கிடுகையில் ஒரு ரூபாய்க்குக் குறைவாக வரக்கூடிய தொகை, அது 50 காசும் அதற்கு மேலும் இருக்குமாயின் அது அடுத்த ஒரு ரூபாயாக கொள்ளப்பட வேண்டும். அதுவே, 50 காசுக்குக் குறைவாக இருந்தால் அது விட்டுவிடப்பட வேண்டும்.

6. மேலே அனுமதிக்கப்பட்ட திருத்தப்பட்ட அகவிலைப்படி தற்போது அகவிலைப்படி பெறும் முழு நேரப் பணியாளர்களுக்கும், சில்லரைச் செலவு நிதியிலிருந்து நிர்ணயிக்கப்பட்ட மாதாந்திர ஊதியம் பெறும் முழு நேரப் பணியாளர்களுக்கும் அனுமதிக்கத்தக்கதாகும். இந்த ஆணையில் அனுமதிக்கப்பட்ட திருத்தப்பட்ட அகவிலைப்படி, பகுதி நேர பணியாளர்களுக்கு அனுமதிக்கத்தக்கதல்ல.

7. இந்த ஆணையில் அனுமதிக்கப்பட்ட திருத்தப்பட்ட அகவிலைப்படி, அரசு மானியம் பெறும் கல்வி நிறுவனங்களில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கும், ஆசிரியர் அல்லாத பிற பணியாளர்களுக்கும், உள்ளாட்சி மன்றங்களின் பணியாளர்களுக்கும், பல்கலைக்கழக மானியக்குழு /அனைத்திந்திய தொழில் நுட்பக் கல்விக்குழு சம்பள வீதங்களின் கீழ்வரும் பணியாளர்களுக்கும், அரசு மற்றும் மானியம் பெறும் பல்தொழில் பயிற்சிப் பள்ளிகள், சிறப்பு பட்டயப் படிப்பு நிறுவனங்களில் பணியாற்றும் ஆசிரியர்கள்/உடற்பயிற்சி இயக்குநர்கள்/நூலகர்கள் ஆகியோருக்கும், வருவாய்த் துறையிலுள்ள கிராம உதவியாளர்களுக்கும், சத்துணவு திட்ட அமைப்பாளர்கள், சிறுவர் நல அமைப்பாளர்கள், அங்கன்வாடிப் பணியாளர்கள் மற்றும் ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் துறையில் பணிபுரியும் பஞ்சாயத்து உதவியாளர்கள்/ கிளார்க்குகள் ஆகியோருக்கும் பொருந்தும்.

8. மார்ச் 2008 ஆம் மாத சம்பளம் பெற்ற பின்னரே, சனவரி மற்றும் பிப்ரவரி 2008 ஆம் மாதங்களுக்கான அகவிலைப்படி நிலுவைத் தொகை வழங்கப்பட வேண்டும்.

9. இச்செலவு, சம்பந்தப்பட்ட கணக்குத் தலைப்பின் பெருந்தலைப்பு, துணைப் பெருந்தலைப்பு, சிறு தலைப்பு உட்தலைப்பின் கீழ்வரும் ''03. அகவிலைப்படி'' என்ற நுணுக்கத் தலைப்பில் பற்று எழுதப்பட வேண்டும்.

10. பட்டிகள் அனுப்பப்படும் போது, முதன்மை மாநிலக் கணக்குத் துறைத் தலைவர் (கணக்குகள் மற்றும் உரிமைத் தொகை), சென்னை–18, அவர்களிடமிருந்து அனுமதிக்காகக் காத்திராமல், திருத்தப்பட்ட அகவிலைப்படியை வழங்குமாறு கருவூல அலுவலர்கள் / சம்பளக் கணக்குகள் அலுவலர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

(ஆளுநரின் ஆணைப்படி)

கு. ஞானதேசிகன்
அரசுச் செயலாளர்

பெறுநர்
அனைத்து அரசுச் செயலாளர்கள்.
செயலாளர், சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை–9.
காப்பாளர், ஆளுநர் மாளிகை, ராஜ்பவன், சென்னை–32.
ஆளுநரின் செயலாளர், ராஜ்பவன், சென்னை–32.
ஆளுநர் செயலகம், ராஜ்பவன், சென்னை–32.
அனைத்துச் செயலகத் துறைகள் (அலுவலக நடைமுறை மற்றும் பட்டியல் பிரிவுகள்).
நிதித்துறையிலுள்ள பிரிவுகள் அனைத்தும்.
அனைத்து துறைத் தலைவர்கள்.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்.
அனைத்து மாவட்ட நீதிபதிகள் / அனைத்து முதன்மை நீதித்துறை மாஜிஸ்டிரேட்கள்.
முதன்மை மாநில கணக்குத் துறைத் தலைவர் (கணக்குகள் மற்றும் உரிமைத் தொகை), சென்னை–18.
முதன்மை மாநில கணக்குத் துறைத் தலைவர் (கணக்குகள் மற்றும் உரிமைத் தொகை), சென்னை–18 (பெயரில்).
மாநில கணக்குத் துறைத் தலைவர் (தணிக்கை–I), சென்னை–35.
மாநில கணக்குத் துறைத் தலைவர் (தணிக்கை–I), சென்னை–35 (பெயரில்).
மாநில கணக்குத் துறைத் தலைவர் (தணிக்கை–II, சென்னை–6.
மாநில கணக்குத் துறைத் தலைவர் (தணிக்கை–II), சென்னை–6 (பெயரில்).
மாநில கணக்குத் துறைத் தலைவர் (உதபி), சென்னை–9 / மதுரை.
இயக்குநர், கருவூலக் கணக்குகள் துறை, சென்னை–15.
சம்பளக் கணக்குகள் அலுவலர் (கிழக்கு), சென்னை–5.
சம்பளக் கணக்குகள் அலுவலர் (தலைமைச் செயலகம்), சென்னை–9.
சம்பளக் கணக்குகள் அலுவலர் (தெற்கு), சென்னை–35.
சம்பளக் கணக்குகள் அலுவலர் (வடக்கு), சென்னை–79.
சம்பளக் கணக்குகள் அலுவலர், மதுரை 625 001.
அனைத்து கருவூல அலுவலகங்கள்.
அனைத்துத் துணைக் கருவூல அலுவலகங்கள்.
தலைவர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை–2.
ஒழுங்கு நடவடிக்கைகள் நடுவர் மன்ற ஆணையாளர், எண்.6, மாணிக்கேஸ்வரி சாலை, சென்னை–10.

பதிவாளர், உயர்நீதி மன்றம், சென்னை–104.
அனைத்து பல்கலைக்கழகங்கள் மற்றும் கோயம்புத்தூர் வேளாண்மைப் பல்கலைக் கழகம் ஆகியவற்றின் பதிவாளர்கள்.
அரசுக்கு சொந்தமான அனைத்து நிறுவனங்கள் / சட்டப்படியான வாரியங்கள்.
ஆணையாளர், மாநகராட்சி, சென்னை/மதுரை/கோயம்புத்தூர்/திருச்சிராப்பள்ளி/சேலம்/திருநெல்வேலி/ஈரோடு/திருப்பூர்.
அனைத்து கோட்ட வளர்ச்சி அலுவலர்கள்.
அனைத்து வட்டார வளர்ச்சி அலுவலர்கள்.
அனைத்து நகராட்சி ஆணையாளர்கள்.
அனைத்து கோட்டாட்சியர்கள்.
அனைத்து வட்டாட்சியர்கள்.
அனைத்து முதன்மை கல்வி அலுவலர்கள்.
திட்ட ஒருங்கிணைப்பாளர், தமிழ்நாடு ஒருங்கிணைந்த சத்துணவுத் திட்டம், எண்.570, அண்ணா சாலை, சென்னை–18.
அனைத்து அங்கீகரிக்கப்பட்ட பணிச்சங்கங்கள்.

<u>நகல் பெறுநர்</u>
அரசு தலைமைச் செயலாளரின் நேர்முக செயலாளர், சென்னை–9.
அரசு நிதித்துறை செயலாளரின் நேர்முக செயலாளர், சென்னை–9.
முதலமைச்சர் அவர்களின் செயலாளர், சென்னை–9.
மத்திய அரசுச் செயலாளர், உள்துறை அமைச்சகம், புதுடில்லி.
மத்திய அரசுச் செயலாளர், நிதி அமைச்சகம் (பொருளாதார விவகாரங்கள் துறை), புதுடில்லி.
மத்திய அரசுச் செயலாளர், நிதி அமைச்சகம் (செலவுத்துறை), புதுடில்லி.
மத்திய அரசுச் செயலாளர், நிதி அமைச்சகம் (வங்கிகள் வருவாய்த்துறை) புதுடில்லி.
மத்திய அரசுச் செயலாளர்,வெளிவிவகார அமைச்சகம், புதுடில்லி.
முதுநிலை ஆராய்ச்சி அலுவலர், சம்பள ஆராய்ச்சிப்பிரிவு,
நிதி அமைச்சகம் (செலவுத்துறை),அறை எண் 261, வடக்கு பிளாக், புதுடில்லி.
இருப்புக்கோப்பு/உதிரி நகல்கள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்